**அமர்வு வழக்கு எண். 48/2021**

**PW12 : சதீஷ்குமார்**

**தேதி : 25.11.2025**

**(எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள்.) (1ம் எதிரி கலையரசன், 3ம் எதிரி M.பிரசாத், 4ம் எதிரி ஷேக்தாவுத், 5ம் எதிரி கோகுல்நாத், 6ம் எதிரி கிரிதர் (எ) கிரி, 8ம் எதிரி சீனிவாசன் (எ) சீனு ஆகிய எதிரிகள் ஆஜராகியுள்ளார்கள். அவர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்.)**

**(2ம் எதிரி சட்டத்துடன் முரண்பட்ட இளம்பிழையாளி என Crl.M.P.208/2024 உத்தரவு பிறப்பிக்கப்பட்டதின் அடிப்படையில் இளம்பிழையாளிக்கு எதிரான வழக்கு கரூர் இளஞ்சிறார் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது).**

**Crl.M.P. No. 1461/2025–ல் 01.09.2025 அன்று பிறப்பித்த உத்தரவின் பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1, 4, 5 மற்றும் 8 ஆம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்மந்தமாக போலிசார் கரூர் அரசு மருத்துவமனையில் என்னை விசாரித்தார்கள். காவல்துறையினர் என்னை 3 முறை விசாரித்தார்கள். வேலாயுதம்பாளையத்தில் உள்ள வான்மதி என்பவர் தான் எனக்கு போன் மூலம் என் சகோதரர் ரஞ்சித்குமாரை வெட்டியதாக தகவல் சொன்னார். வான்மதிக்கும் உங்கள் சகோதரர் ரஞ்சித்குமாருக்கும் திருமணத்தை மீறிய உறவுமுறை இருந்து வந்தது என்று சொன்னால் கேள்விப்பட்டுள்ளேன். என் சகோதரரக்கு திருமணம் ஆகி 2 குழந்தைகள் உள்ளது. ரஞ்சித்குமாரின் மனைவி பெயர் புனிதவள்ளி. புனிதவள்ளி புகார் கொடுத்து உங்கள் சகோதரர் இறப்பதற்கு 15 நாட்கள் முன்பு சிறை சென்று வந்தார் என்று சொன்னால் நான் கேள்விப்பட்டேன். சம்பவ சமயத்தில் என் சகோதரர் வேலாயுதம்பாளையத்தில் உள்ள வான்மதி கடையில் இருந்து கொண்டிருந்தாக கேள்விப்பட்டேன். உங்கள் சகோதரர் மீது திருச்சி மாவட்டத்தில் பல குற்றவழக்குகள் இருந்தது என்றால் 75 பிரிவு வழக்கு மட்டும் தான் இருந்தது. பல வழக்குகள் இருந்ததால் தான் உங்கள் சகோதரர் திருச்சியிலிருந்து வேலாயுதம்பாளையம் வந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல அவர் வேலை செய்வதற்காகத்தான் வேலாயுதம்பாளையம்

வந்திருந்தார். உங்கள் சகோதரர் மீது திருச்சியில் பல வழக்குகள் இருந்ததால் தான் போலிசார் கெடுபிடியினால் கரூர் வந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் சகோதரர் மீது பல கொள்ளையடித்த வழக்குகள் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. உங்கள் சகோதரர் ரஞ்சித்குமாருக்கும் கொள்ளையடித்து பிரிப்பதில் மற்ற நபர்களுடன் தகராறு இருந்தது என்று சொன்னால் சரியல்ல. உங்கள் அண்ணன் ரஞ்சித்குமார் வான்மதியுடன் தகாத உறவு இருந்ததால் வான்மதியின் கணவருக்கும் உங்கள் அண்ணன் ரஞ்சித்குமாருக்கு பிரச்சனை இருந்து வந்தது என்றால் தெரியாது. உங்கள் அண்ணன் ரஞ்சித்குமாருக்கும் வான்மதியின் கணவர் லோகநாதனுக்கும் முன்விரோதம் இருந்து வந்தது என்றால் தெரியாது. உங்கள் அண்ணன் ரஞ்சித்குமார் உங்கள் அண்ணியுடன் பிரிந்து வாழ்வதால் புனிதவள்ளி குடும்பத்திற்கும் உங்கள் அண்ணனுக்கும் பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரியல்ல. ஜெகதீசனுக்கும், உங்கள் அண்ணன் ரஞ்சித்குமாருக்கும் முன்விரோதம் இருந்து வந்தது என்றால் சரியல்ல. கலையரசனுக்கும், கூல்மணிக்கும், உங்கள் அண்ணன் ரஞ்சித்குமாருக்குமிடையே எந்த வித முன்விரோதமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதின்பேரில் நீங்கள் பொய்யாக இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. கூல்மணி உங்களுக்கு யார் என்று தெரியாது என்றும் காவல்துறையினரால் அடையாளம் காண்பித்து தான் கூல்மணியை அடையாளம் காட்டியுள்ளீர்கள் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.11.25 18:10:01 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.